தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730
94435 78172

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 17-4-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பூச்சி நோய் கண்காணிப்பு மற்றும் முன் அறிவிப்பு - ஏப்ரல் 2014

### நெல்

ஈரோடு, திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் நெற்பயிரில் இலைச்சுருட்டுப் புழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்குதல் பரவலாக காணப்படுகின்றது. இவற்றை கட்டுப்படுத்த விளக்கு பொறிகளை அமைத்து அந்த பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணிக்கவும்.

பூச்சிகளின் பாதிப்பு அதிகமாக இருக்கும் நிலையில் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவீதம் கரைசலை தயாரித்து பயிர்கள் மீது தெளிக்கலாம்.

பாக்டீரியா இலை கருகல் நோய் தேனி மாவட்டத்தில் தென்படுகிறது. இவற்றை கட்டுப்படுத்த கோசைடு 2.5 கிராம் எடுத்து ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

### உளுந்து

திருவாரூர் மாவட்டத்தில் உளுந்து பயிரில் மஞ்சள் தேமல் நோய் காணப்படுகின்றது. உளுந்து பயிரில் தென்படும் மஞ்சள் தேமல் நோயை கட்டுப்படுத்த விவசாயிகள் டைமித்தோவேட் அல்லது மீதைல் டெமட்டான் 2 மில்லியை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

### பருத்தி

தர்மபுரி, தேனி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் பருத்தியில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டம் தென்படுகிறது. இவற்றின் நடமாட்டத்தை மஞ்சள் நிற ஒட்டும் பொறியை வைத்து கண்காணிக்கவும் - அதிக சேதம் காணப்படும் பயிர்களில்

இமிடோகுளோபிரிட் 200 எஸ்.எல் என்ற மருந்தை 100 மில்லி அல்லது மீதைல் டெமட்டான் 25 ஈசி 50 மில்லி மருந்தை ஒரு எக்டருக்கு உபயோகிக்கலாம்.

**கரும்பு**

கோயமுத்தூர், ஈரோடு, கடலூர், தேனி மாவட்டத்தில் கரும்பில் தண்டு துளைப்பான் தாக்குதல் பரவலாக காணப்படுகின்றது. இதை கட்டுப்படுத்த *டிரைக்கோகிரம்மா* முட்டை ஒட்டுண்ணிகளை 4வது மாதம் முதல் 15 நாட்கள் இடைவெளியில் ஏக்கருக்கு 1 சி.சி என்ற அளவில் 6 தடவை வெளியிட வேண்டும்.

**நிலக்கடலை**

நிலக்கடலை பயிரில் இலைச் சுருட்டுப் புழுவின் தாக்குதல் கோயமுத்தூர், ஈரோடு, திண்டிவனம், விழுப்புரம், இராமநாதபுரம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் காணப்படுகிறது. விளக்கு பொறிகளை வைத்து அந்துப்பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணிக்கலாம். தேவைப்படும் பட்சத்தில் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவீதம் தயாரித்து தெளிக்க வேண்டும். கோடை மழை பெய்யாததினால் இலைச் சுருட்டுப்புழு தாக்குதல் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

**சாறு உறிஞ்சும் பூச்சிகள்**

குறிப்பாக வரும் மாதத்தில் வறண்ட வானிலையே காணப்படும் என்று எதிர்பார்க்கப் படுவதால் வெள்ளை ஈ, மாவுப்பூச்சி, தத்துப்பூச்சிகள் மற்றும் இலைப்பேன் ஆகிய சாறு உறிஞ்சும் பூச்சிகள் பரவலாக விவசாய பயிர்களில் அதிகமாக தென்பட வாய்ப்புள்ளது. ஆகையால் விவசாயிகள் தங்கள் வயல்களில் மஞ்சள் ஒட்டும் பொறிகளை (5/ஏக்கர்) வைத்து சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டத்தை கண்டறியவும். தேவைப்படின் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவீதம் அல்லது வேப்ப எண்ணைய் 3 சதம் அல்லது ட்ரைஅசோஸ்பாஸ் 2 மில்லி 1 லிட்டர் தண்ணீருக்கு தயாரித்து பயிர்கள் மீது தெளிக்கலாம்.

**தகவல்**

இயக்குநர்,
பயிர் பாதுகாப்பு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோவை – 3.

மக்கள் தொடர்பு அலுவலர்